**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–1

O.S.No. 196/2025

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திருமதி. சசிரேகா | வயது:35 |
| க/பெ. : திரு. பிரதீப்குமார் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி வங்கி மேலாளர் ஆஜர். பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக உள்ளார்கள். வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதி வங்கி மேலாளர். முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 01.10.2015 – பிரதிவாதிகள் வாதி வங்கியில் கொடுத்த கடன் விண்ணப்பம் | அசல் | வா.சா.ஆ 1 |
| 16.10.2015 – வாதி வங்கி கடன் அனுமதித்தற்கான கடிதம் | அசல் | வா.சா.ஆ 2 |
| 16.10.2015 – பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் உடன் படிக்கை | அசல் | வா.சா.ஆ 3 |
| 20.05.2023 – பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் ஒப்புகை தொடர்ச்சி கடிதம் | அசல் | வா.சா.ஆ 4 |
| 04.01.2025 – 01.01.2016 முதல் 04.01.2025 வரை உள்ள முதல் பிரதிவாதியின் வங்கி கணக்கு பரிமாற்ற விவரங்கள் | கணினி நகல் | வா.சா.ஆ 5 |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை இல்லை**

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.04.18 13:39:05 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.